
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 26 2025

வியாழக்கிழமை 26, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 270 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## கதிர்காமம் ஆடிவேல் திருவிழா ஆரம்பம்

கதிர்காமம் ஆடிவேல் திருவிழா 2025, ஜூன் 26 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஜூலை 10 அன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகிறது.

தொடர்ச்சி P2



## தந்தை செல்வா சிலையின் தலை தகர்ப்பு

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் நகர மத்தியில் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை இனம் தெரியாத நபர்களினால் புதன்கிழமை (25) அதிகாலை உடைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# அணையா விளக்கில் வோல்கர் டர்க்

## செம்மணி புதைக்குழியையும் பார்வையிட்டார்

இலங்கைக்கு விஜயம் செய்து, யாழ்ப்பாணத்தை புதன்கிழமை (25) மாலை வந்தடைந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் (Volker T-rk), சர்ச்சைக்குரிய செம்மணி புதைக்குழியையும் பார்வையிட்டார்.

ஸ்ரீலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த அவர், நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

தொடர்ச்சி P2



## பாடசாலை 'டெங்கு ஒழிப்பு தினம்' பிரகடனம்

பாடசாலை டெங்கு ஒழிப்பு தினமாக ஜூலை 09 ஆம் திகதியை பிரகடனப்படுத்தி 'Clean Sri Lanka' பங்களிப்புடன் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அமைதிக்கான நோபலுக்கு ட்ரம்பின் பெயர் பரிந்துரை



அமைதிக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் பெயரை சமீபத்தில் பாகிஸ்தான் பரிந்துரைத்தது. ஆனால் பல போர்களை நிறுத்த முயற்சி மேற்கொண்டாலும் தனக்கு நோபல் பரிசு தர மாட்டார்கள் என்று டிரம்ப் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அமைதிக்கான நோபல் பரிசுக்கு ட்ரம்ப் பெயர் முறைப்படி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.


தொடர்ச்சி P2

## "பகடைக்காயாக பயன்படுத்தி ஏமாற்ற வேண்டாம்"



நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையினரை அரசியல் பகடைக்காயாகப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்ற வேண்டாம். உடனடியாக அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2



## பிள்ளைகளை யாசகத்தில் ஈடுபடுத்த முழுத்தடை

16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை யாசகத்தில் ஈடுபடுத்தல், பல்வேறு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஈடுபடுத்தல் மற்றும் 16-18இற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் வீட்டுப் பணி உள்ளிட்ட அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதை 2025.07.01ஆம் திகதி தொடக்கம் முழுமையாகத் தடைசெய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது.

தொடர்ச்சி P2

## தென்னகோன் அளித்த சுவாரஸ்யமான பதில்கள்



தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவின் முன்னிலையில், கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் செவ்வாய்க்கிழமை (24) சாட்சியமளித்தார். அவர் கூறிய சுவாரஸ்யமான பதில்கள்...

(முழு விபரம் பக்கம் 6)





## உணர்வெழுச்சியுடன் நிறைவடைந்தது 'அணையா விளக்கு'

செம்மணி படுகொலைக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அணையா விளக்கு போராட்டத்தின் இறுதி நாளான புதன்கிழமை(25) பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன் உணர்வெழுச்சியாக நடைபெற்றது.

(மேலதிக படங்கள் பக்கம் 06)

– நிதர்ஷன் வினோத்,

## பிணங்களுக்கும் மூளை அறுவை சிகிச்சை செய்தார்



ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர், சுமார் ரூ.50,000 மதிப்புள்ள அறுவை சிகிச்சை உபகரணங்களை ரூ.175,000க்கு நோயாளிகளுக்கு விற்றதாகக் கூறப்படும் நிலையில், இறந்த நோயாளிகளுக்கு மூளை அறுவை சிகிச்சை கூட செய்ததாகக் கூறினர்.

தொடர்ச்சி P2

### நுவரெலியா அஞ்சல் கட்டிடம்:

## அமைச்சரவை தீர்மானம் இரத்து



நுவரெலியா அஞ்சல் அலுவலகக் கட்டிடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு 2024.04.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒப்படைப்பதற்கு எதிராக தபால் ஊழியர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். குறித்த கட்டிடத்தில் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னரைப் போன்று மேற்கொண்டு செல்வதற்கும் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்குப் பயன்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்னர் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 'அணையா விளக்கில்' சிவஞானத்துக்கு சிக்கல்



யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'அணையா விளக்கு' போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற வட மாகாண சபை அவைத் தலைவரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவருமான சீ.வி.கே.சிவஞானம் போராட்ட களத்தில் நின்ற மக்களால் அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# தந்தை செல்வா சிலையின் தலை தகர்ப்பு

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின், மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச் சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து சிலையில் தலைப்பாகம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அணையா விளக்கில்...





செம்மணி படுகொலைக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 'அணையா விளக்கு' போராட்டத்தின் இறுதி நாளான புதன்கிழமை (25) பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன் உணர்வெழுச்சியாக நடைபெற்றது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் 'அணையா விளக்கு' போராட்டம் எனும் தொனிப்பொருளில் சர்வதேச நீதி கோரி திங்கட்கிழமை (23) ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் இரவு பகலாக நடைபெற்று மூன்றாவது நாளான புதன்கிழமை (25) மிகவும் எழுச்சியாக முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய காலையில் அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலி செலுத்தப்பட்டுத் தொடர்ந்தும் அணையா விளக்குப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில், தாயகச் செயலணி உறுப்பினர்கள் மகஜர் கையளித்து செம்மணிக்கு விஜயம் செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், ஆணையாளர் வோல்கர் டர்க்கரை செவ்வாய்க்கிழமை (24) தாயகச் செயலணி மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் செல்வகுமார் தலைமையில் சென்ற குழுவினரே இவ்வாறு அழைப்பு விடுத்திருந்தனர். இந்நிலையில், யாழ்ப்பாணத்திற்குப் புதன்கிழமை (25) விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோக்கர் டர்க் (Volker T-rk) கவனத்தை ஈர்க்கும் முகமாகக் கோவில் வீதியில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், அணையா விளக்கு போராட்ட களத்திற்கு சென்று மலர் தூவி வணங்கினார்.

# அமைச்சரவை தீர்மானம் இரத்து

அதற்கமைய, நுவரெலிய அஞ்சல் அலுவலகக் கட்டிடம் மற்றும் காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (24) அன்று கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உள்நாட்டு/வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் வகையிலும், புதிய வருமான ஈட்டல்களுக்கு இயலுமை கிட்டும் வகையில் கட்டிடம் மற்றும் காணியை நவீனமயப்படுத்துவதற்கும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அமைதிக்கான நோபலுக்கு ட்ரம்பின் பெயர் பரிந்துரை

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.பி.யான கார்ட்டர், நோபல் குழுவிற்கு எழுதிய கடிதத்தில் ட்ரம்பின் பெயரை பரிந்துரை செய்துள்ளார். இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதலை முடிவுக்கு வந்த ட்ரம்பின் பங்கு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு இதுவரை 338 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று, நோபல் குழு தெரிவித்துள்ளது.

# 'அணையா விளக்கில்'
## சிவஞானத்துக்கு சிக்கல்

அணையா விளக்கு போராட்டம் மூன்றாவது நாளாக புதன்கிழமையும் (25) தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பகல் வேளையில் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற சிவஞானத்தை அங்கிருந்த மக்கள் வெளியேறுமாறு கோஷங்களை எழுப்பி போராட்ட களத்தில் இருந்து வெளியேற்றியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என பகிரங்கமாகக் குற்றச்சாட்டப்பட்டு வரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினருடன் கூட்டுச் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆட்சி அமைத்துள்ளதாகவும், அவ்வாறானவர்களுடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளத் தகுதியற்றவர்கள் என்றும் கூறியே போராட்ட களத்தில் இருந்து சிவஞானத்தை அப்புறப்படுத்தியதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

# "பகடைக்காயாக பயன்படுத்தி ஏமாற்ற வேண்டாம்"

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் சொத்துக்களை ஏலம் விடும் பராட்டே சட்டம் ஜூன் 30 முதல் மீண்டும் அமலுக்கு வரவிருப்பது குறித்து புதன்கிழமை (25) அன்று விசேட கருத்தை வெளியிட்டே போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகளில் பெரும் பங்காற்றி, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களே மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இந்தத் துறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50%க்கும் அதிகமாகப் பங்களிக்கிறது. கிட்டத்தட்ட 4 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது.

சமீபத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்றுநோய் பரவல் மற்றும் வங்குரோத்து நிலை போன்ற மூன்று நெருக்கடிகளால் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் தமது முயற்சியாண்மைகளில் வீழ்ச்சியைச் சந்தித்தனர்.

அரசாங்க புள்ளிவிவரங்களின்படி, 2022ஆம் ஆண்டுக்குள் 263,000 இதுபோன்ற தொழில் முயற்சிகள் வீழ்ச்சி கண்டுள்ளன. ஆரம்பத்திலிருந்தே, அரசாங்கத்தின் நேரடித் தலையீடு மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி வெளிப்படுத்தியது.

இந்த மூன்று துயர சம்பவங்களால், நுண், சிறிய மற்றும் தொழில்முனைவோர் தங்கள் கடின உழைப்பால் கட்டியமைத்த தமது தொழில் முயற்சிகள் வீழ்ச்சி கண்டன. இதனால், தமது கடன் தவணைகளை அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாமல் போனது. பராட்டே சட்டத்தை பயன்படுத்தி இந்த தொழில் முயற்சிகள் அமைந்து காணப்பட்ட அவர்களினது இடங்கள், சொத்துக்கள், வீடுகள் மற்றும் ஏனைய வளங்களைத் தன்னிச்சையாக ஏலம் விடுவதை எதிர்க்கட்சி கடுமையாகக் கண்டித்ததன் விளைவாக, முந்தைய மற்றும் தற்போதைய அரசாங்கங்கள் இந்த பராட்டே சட்டத்தை அமுல்படுத்துவதை தற்காலிமகாக ஒத்திவைத்தன. என்றாலும், இரு அரசாங்கங்களும் தேர்தல் நோக்கங்களைக் கருத்தில் கொண்டே இதைச் செய்தன.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. ஜூன் 30 முதல் சொத்துக்கள் மீண்டும் ஏலம் விடப்படவுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் நிலையான தீர்வை வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்கம் எடுக்கும் முடிவுகளை மத்திய வங்கி கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. திறைசேரி வழங்கும் அறிவுறுத்தல்களை வங்கிகள் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. அரசாங்கம் வழங்கும் அறிவுறுத்தல்களை வங்கிக் கட்டமைப்பு கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. அரசாங்கம் பிறப்பிக்கும் அறிவுறுத்தல்களை வங்கிகள் பின்பற்றுவதில்லை என்பதைக் கொண்டு அரசாங்கமொன்று இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இவர்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். நாட்டிற்கு பெரும் பங்களிப்பை வழங்கி பெரும் செல்வ சுழற்சியை ஏற்படுத்தி வரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை அரசியல் பகடைக்காயாக மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் நாட்டின் சொத்தாக இருப்பதால், இவர்களைப் பாதுகாக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம். அரசாங்கத்தின் தலையீடு இதில் விரைவாக அமைந்து காணப்பட வேண்டும். தேர்தலின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# பிணங்களுக்கும் மூளை அறுவை சிகிச்சை செய்தார்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகள், கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (24) சாட்சியமளித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

தனது தனியார் நிறுவனம் மூலம் விற்கப்பட்ட அறுவை சிகிச்சை உபகரணங்களைப் பணத்திற்கு நோயாளிகளுக்கு வழங்கும் நோக்கில் இறந்த நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதாகவும், மூளை இறந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு நோயாளியின் இதயம் ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகப் பிரேதப் பரிசோதனையில் தெரியவந்ததாகவும் ஆணைக்குழு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைக்குத் தேவையான அறுவை சிகிச்சை உபகரணங்களைத் தனது தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்கச் சொல்லி முந்நூறு மில்லியன் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சிறப்பு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் உட்பட மூவருக்கு எதிரான விசாரணை கோரப்பட்டபோது இந்த உண்மைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த புகார் அளிக்கப்பட்டபோது, சந்தேக நபர்களான, ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையின் 18ஆவது வார்டுக்குப் பொறுப்பான சிறப்பு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் மகேசி சூரசிங்க விஜேரத்ன, அந்த மருத்துவரின் நிறுவனங்களில் ஒன்றில் பணியாற்றிய முத்துக்குடா ஆராச்சிகே நிமல் ரஞ்சித் மற்றும் மருத்துவமனையின் உதவி முகாமையாளர் லியனகே இந்திகா ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதுவரை கிடைத்த உண்மைகளின் அடிப்படையில், சந்தேக நபர் மருத்துவர், அரசாங்க சுற்றறிக்கை ஆவணங்களை மீறி, கொள்முதல் செயல்முறையின்படி, அறுவை சிகிச்சை உபகரணங்களை வாங்குவதற்குப் பதிலாக மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை உபகரணங்களை விற்பனை செய்வதற்காக ஒரு நிறுவனத்தை நிறுவினார் என்றும், அந்த நிறுவனம் சுமார் முந்நூறு நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை உபகரணங்களைப் பணத்திற்கு வழங்கியுள்ளது என்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நோயாளிகளில் 77 பேர் இந்த இழப்பை சந்தித்துள்ளதாகவும், மேலும், 92 நோயாளிகள் தொலைபேசி மூலம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் புகார் அளித்துள்ளதாகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# கதிர்காமம் ஆடிவேல்...

கதிர்காமத்துக்கான பாதயாத்திரை, ஜூன் 20 அன்று காட்டுப்பாதை வழியாக தொடங்கியது, மேலும் ஜூலை 4ஆம் திகதி பாதை யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ். கதிர்காமம் பாத யாத்திரீகர்கள் 55ஆவது நாளில் கதிர்காம கந்தன் ஆலயத்தை செவ்வாய்க்கிழமை (24) அன்று சென்றடைந்தனர்.

யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் 1ஆம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 56 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, மொனராகலை ஆகிய ஆறு மாவட்டங்களைக் கடந்து செல்ல கதிர்காமத்தில் பிரவேசித்துள்ளனர்.

# பாடசாலை...

இந்நாட்களில் பரவிவரும் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களின் பரவலைக் குறைக்கும் நோக்கில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் Clean Sri Lanka செயலகம் இணைந்து ஜூலை 09ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

'Clean Sri Lanka Day' என்ற பெயரில் பெயரிடப்பட்டுள்ள, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் கல்வி, உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தலைமையில் கல்வி அமைச்சில் செவ்வாய்க்கிழமை (24) அன்று நடைபெற்றது.

நோய் பரவாமல் தடுத்தல், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்றுவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, பாடசாலை மாணவர்களிடையே சுற்றாடல், சமூக மற்றும் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதை இந்த நிகழ்ச்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்துடன், இதற்கு இணையாக இலங்கையிலுள்ள 10,096 பாடசாலைகளை உள்ளடக்கிய வகையில் ஓவியம், சுவரொட்டிக் கண்காட்சிகள், நாடகம், கலாசார மற்றும் இசையம்சங்கள், விழிப்புணர்வு உரைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இங்கு குறிப்பிடப்பட்டது.

சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், இலங்கைப் பொலிஸ், முப்படை, சிவில் பாதுகாப்பு திணைக்களம், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் ஆளுநர் அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆதரவைப் பெறுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பிள்ளைகளை யாசகத்தில்...

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் சமர்ப்பித்த அமைச்சரவை யோசனைக்கே அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வீதியோரங்களில் யாசகத்தில் ஈடுபடுத்தல், பண்டங்கள் விற்பனை செய்வித்தல், வீட்டுப் பணிகள் உள்ளிட்ட அபாயகரமான தொழில்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதற்கு எதிரான சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்தல்

சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கமைய 18 வயதுக்கு குறைவான அனைவரும் சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. புதிய புள்ளி விபரங்களுக்கமைவாக, நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் சிறுவர்களாவர்.

ஒருசில சிறுவர்கள் பல்வேறு காரணங்களால் ஏதேனுமொரு தொழில் செய்வதற்கு உந்தப்படுவதும், தமது தாய் தந்தையுடன், மனித வியாபாரத்திற்கு இரையாகி 'வீதியோர சிறுவராக' பெற்றோர் அல்லாதவர்களுடன் பொது இடங்களில் யாசகத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும், பல்வேறு பொருட்கள் விற்பனையில் ஈடுபடுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை யாசகத்தில் ஈடுபடுத்தல், பல்வேறு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஈடுபடுத்தல் மற்றும் 16-18 இற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் வீட்டுப் பணி உள்ளிட்ட அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதை 2025.07.01 ஆம் திகதி தொடக்கம் முழுமையாகத் தடைசெய்வதற்குத் தீர்மானம்

அதற்கான இயலுமை கிட்டும் வகையில் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை அந்தந்த அதிகாரிகள் மூலமாக கடுமையாக அமுல்படுத்துவதற்கும், அதுதொடர்பான விரிவான பரப்புரை வேலைத்திட்டத்தின் மூலம் பொதுமக்களைத் தெளிவுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

# ஐ.நா. ஆணையாளர் திருமலைக்கு விஜயம்

எஸ்.கீதபொன்கலன்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் உயர் ஆணையாளர் வோல்கர் டர்க் புதன்கிழமை(25) அன்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

இதன்போது அவர், யூபிலி மண்டபத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் மண்டபத்திற்கு ஆணையாளர் வருகை தந்த போது வெளியில் கூடியிருந்த பல்வேறு அமைப்புகளின் மக்களையும் சந்தித்து அவர்களது கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.



மத்திய கிழக்கு சூழ்நிலையை

# ஆராய அமைச்சரவை உப-குழு நியமனம்



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போது மோசமடைந்துள்ள போர்ச்சூழல் காரணமாக தொடர்ந்துவரும் காலங்களில் இலங்கை எதிர்கொள்வதற்கு நேரிட்டுள்ள சவால்கள் தொடர்பாக முற்கூட்டிய தயார்நிலை இருக்க வேண்டிய தேவை பற்றி அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய, மத்திய கிழக்கு போர்ச்சூழல் தொடர்பாக ஆராய்ந்து, தாக்கங்கள் ஏற்படக்கூடிய துறைகள், தாக்கத்தின் அளவு மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வு செய்து, அமைச்சரவைக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான விதந்துரைகளை வழங்குவதற்காகக் கீழ்க்காணும் கட்டமைப்புடன் கூடிய அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்கும், குறித்த உபகுழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஏற்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வெளிவிவகார,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், பெருந்தோட்டத்துறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த விதயாரத்ன, வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி(பொறியியலாளர்) ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.



## கதிர்காமத்தை சென்றடைந்த பாத யாத்திரீகர்கள்

வி.ரி.சகாதேவராஜா

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ். கதிர்காமம் பாத யாத்திரீகர்கள் செவ்வாய்க்கிழமை (24) அன்று 55ஆவது நாளில் கதிர்காம கந்தன் ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் 1ஆம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 56 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு , திருகோணமலை, அம்பாறை, மொனராகலை ஆகிய ஆறு மாவட்டங்களைக் கடந்து செல்ல கதிர்காமத்தில் பிரவேசித்துள்ளனர்.

## மைத்துனரை வெட்டிக் கொன்றவர் தப்பியோட்டம்

கனகராசா சரவணன்



கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள புளுட்டுமானோடை வயல் பகுதியில் வேளாண்மை காவலுக்குச் சென்ற மைத்துனர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய் தர்க்கத்தையடுத்து, ஒருவர் கோடாரியால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (24) இரவு இடம்பெற்றுள்ளது.

கரடியனாறு , உசனார்மலை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய வீரையா விஜயகாந்த் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மைத்துனர்கள் இருவரும் செவ்வாய்க்கிழமை (24) மாலை வீட்டை விட்டு வெளியேறி புளுட்டுமானோடை பகுதியில் வேளாண்மை காவலுக்காக வயலுக்குச் சென்று, வாடியில் தங்கியிருந்த நிலையில், மதுபானம் அருந்திய இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, சந்தேக நபர் , மற்றவர் மீது கோடாரியால் தாக்கியதில் பலத்த காயமடைந்தவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து சந்தேக நபர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தையடுத்து அங்கு பொலிஸ் தடயவியல் பிரிவினர் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ‘சூட்டி நங்கி’ கைது



போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட ‘தொடம்வத்த சூட்டி நங்கி’ என்ற பெண் உட்பட மூவர் மஹியங்கனை பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (24) அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் பதுளை, மஹியங்கனை, தொடம்வத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

‘தொடம்வத்த சூட்டி நங்கி’ என்ற பெண்ணும் அவரது தந்தை மற்றும் மைத்துனருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 10.4 கிராம் ஐஸ் போதைப் பொருள், 11 கையடக்கத் தொலைபேசிகள், போதைப்பொருள் விற்பனை மூலம் சம்பாதித்த 119,000 ரூபாய் பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

‘தொடம்வத்த சூட்டி நங்கி’ என்ற பெண்ணின் தாயாரும் இதற்கு முன்னர் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியாவில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த பெண் ஒருவர் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, கெலேகலைப் பகுதியில் வைத்து புதன்கிழமை (25) காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளுக்கு முன்பாக அதே திசையில் பயணித்த பேருந்தை முந்திச் செல்ல முயன்ற போது மோட்டார் சைக்கிள் சறுக்கி, வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் மீது மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் கார் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

எம்.யூ.எம்.சனூன்



வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறையானது Amana takafull life pls நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றை திங்கட்கிழமை (23) அன்று கைச்சாத்திட்டது.

இது கல்வி மற்றும் தொழில். துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது.

இந்நிகழ்வானது பாரம்பரிய மங்கள விளக்கேற்றுவதன் மூலம் ஆரம்பமாகியதுடன் இதில் முக்கிய அதிதிகளான சிரேஷ்ட பேராசிரியர் அ. அற்புதராசா (துணைவேந்தர்), பேராசிரியர் யோ. நந்தகோபன் (பீடாதிபதி),

திரு. கீஹான் ராஜபக்ஷ (CEO), திரு புவிராஜ் (உதவி பொது முகாமையாளர்), திரு. எஸ்.ஏ. ஜூட் லியோன் (சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறைத் தலைவர்), மற்றும் திரு. எஸ். சிவநேந்திரா (.சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்) உட்பட இரு நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் துறை தலைவர், பீடாதிபதி, துணைவேந்தர் மற்றும் CEO / Amana taka full life plc ஆகியோர் உரையாற்றினர். கே.பி.டபிள்யூ. தில்ஹானி, ஆர். வீரசிங்க ஆகியோரால் ஒப்பந்தத்தின் மேலோட்ட விளக்கம் வழங்கப்பட்டது.

பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக கைச்சாத்திடப்பட்டு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக நிர்வாகிகளான பதிவாளர், நிதியாளர், உதவிப் பதிவாளர், துறை தலைவர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்கள் ஆகியோர் ஈடுபாடுடன் பங்கேற்றனர்.

இது இந்நிறுவன ஒத்துழைப்பிற்கான பல்கலைக்கழகத்தின் வலுவான ஆதரவை பிரதி பலிக்கிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், கூட்டு ஆய்வு மாணவர்களின் திறன் மேம்பாடு பயோடோ அறிவீனை பரிமாற்றம், மற்றும் தொழில்துறை தொடர்புகளை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது கல்வி நிறுவனங்களுக்கும், தனியார் துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தி, பரஸ்பர வளர்ச்சி மற்றும் புதுமைகளை ஊக்குவிக்க துணை செய்யும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## தலைக்கவசத்தால் தாக்கியதில் ஒருவர் பலி

புளத்சிங்கள, ஹல்வதுர, எபிடவத்த பகுதியில், இருவருக்கு இடையே ஏற்பட்ட கடுமையான வாக்குவாதத்தின் போது, தலைக்கவசத்தால் தாக்கப்பட்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளத்சிங்கள, ஹல்வதுர பகுதியைச் சேர்ந்த மானகே சமன் பாலித (வயது 50) என்ற உயிரிழந்த நபர், நான்கு பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர் 23 வயதுடையவர் என்றும், இறந்தவரின் உறவினரை மணந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை புளத்சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர்களை யாசகத்தில் ஈடுபடுத்தல் குற்றவியல் குற்றமாகும்

16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை யாசகத்தில் ஈடுபடுத்தல், பல்வேறு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஈடுபடுத்தல் மற்றும் 16-18 இற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் வீட்டுப் பணி உள்ளிட்ட அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதை 2025.07.01ஆம் திகதி தொடக்கம் முழுமையாகத் தடைசெய்வதற்கு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையில், செவ்வாய்க்கிழமை (24) அன்று கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதியோரங்களில் யாசகத்தில் ஈடுபடுத்தல், பண்டங்கள் விற்பனை செய்வித்தல், வீட்டுப் பணிகள் உள்ளிட்ட அபாயகரமான தொழில்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதற்கு எதிரான சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்தல் எனும் தலைப்பின் கீழ் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் சமர்ப்பித்த அமைச்சரவை யோசனைக்கே அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கமைய 18 வயதுக்குக் குறைவான அனைவரும் சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. புதிய புள்ளி விபரங்களுக்கமைவாக, நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் சிறுவர்களாவர்.

தெருக் குழந்தைகளை அகற்றுவதற்கும், குழந்தைகள் பிச்சை எடுப்பதில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கும் எடுக்கப்பட்டிருக்கும் இந்த தீர்மானத்தை வரவேற்கும் அதேநேரத்தில், வீட்டுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சிறார்களையும் மீட்டெடுத்து, பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

குழந்தைகளைக் கையாள்வதற்காக நம் நாட்டில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றில், குழந்தைகளைப் பயன்படுத்தி பிச்சை எடுத்தல் முக்கிய குற்றவியல் சட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும், அபராதமும் விதிக்கப்படும் குற்றமாகும்.

அத்தகைய குற்றத்தைச் செய்யும் ஒருவரை பிடிவிறாந்து இல்லாமல் பொலிஸார் கைது செய்யலாம் என்றும், அந்தக் குற்றம் பிணையில் வெளிவர முடியாத குற்றம் என்றும் கூறுகிறது.

குழந்தைகள் மற்றும் இளைஞர் கட்டளைச் சட்டத்தின் பிரிவின் கீழ், பெற்றோர் அல்லாத நபர்கள் குழந்தைகளைப் பிச்சை எடுப்பதைத் தடை செய்கிறது. ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் இரண்டும் விதிக்கப்படுகின்றன. கூடுதலாக, ஒரு நபர் ஒரு குழந்தையைக் காவலில் எடுத்து குழந்தையின் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும் ஒரு இரசாயனப் பொருளைக் கொடுத்திருந்தால், ஒரு குழந்தையைக் கொடுமைப்படுத்தியதற்காக 2 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படலாம் என்று கூறுகிறது.

இந்த வழியில் கருத்தில் கொள்ளும்போது, குழந்தைகள் யாசகம் எடுக்கக் கட்டாயப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்க நமது நாட்டில் தற்போது ஒரு வலுவான சட்ட அமைப்பு உள்ளது என்பது தெளிவாகிறது. அதனை முறையாக அமுல்படுத்த வேண்டும்.

உண்மையில், இந்தச் சட்டங்களைச் செயல்படுத்த சட்டப்பூர்வமாகக் கடமைப்பட்ட அதிகாரிகள் அவற்றைச் செயல்படுத்தாமல் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறார்கள் என்பதே பிரச்சனையாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கத்திப் பேசியே தங்களின் தவறான கருத்துகளைச் சரியானது என வாதிடுபவர்கள் பலருளர். அமைதியாகவும் இனிமையாகவும் பேசி தங்களின் கருத்துகளைக் கூறவேண்டும்.

பேசும்போது கூட, மிரட்டும் தொனியில் பேசுவது அநாகரிகமானது. அமைதியான மனிதர்கள் இத்தகையவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டார்கள்.

பொய்களைப் பேசுபவர்களுக்கு உண்மைகள் எதுவெனப் புரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது, கண்டபடி பேசுவதற்கானது அல்ல, சில அரசியல்வாதிகள் எப்படியும் பேசுவார்கள். அத்தகையவர்கள் கேலிக்குரியவர்களாகி விடுவர்.

சிலர் வதந்திகளைக் கேட்கப் பிரியப்படுவார்கள். அவர்கள், தங்களின் பொய்யான பேச்சுகளுடன் வதந்திகளையும் உள்நுழைத்து விடுவார்கள்.

நல்ல வார்த்தைகளுக்கு உயிருண்டு. பொய்களைப் புனைபவர் சமூகத்தில் நம்பிக்கை அற்றவர் ஆகின்றார். பொய்> துன்பங்களைப் பிரசவிக்கிறது.

பேச்சுகள் மூலம் ஒருவரைக் காயப்படுத்துவது மகாபாவம். நல்ல நெஞ்சில் இருந்து, அழகான சொற்கள் உற்பத்தியாகின்றன.

- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பயிர் நிலங்களுக்கு நடுவே குப்பைத்திடல்

கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள கணேசபுரம் கிராமத்தில் கட்டைபறிச்சான் - பள்ளிக்குடியிருப்பு பிரதான வீதியோரமாக மூதூர் பிரதேச சபையால் கொட்டப்பட்ட குப்பை திடல் காணப்படுகின்றது.

இதனால் குறித்த பிரதேசம் கொலைக்களமாக மாறிவரும் பிரதேசமாகக் காணப்படுவதாக அப்பகுதியிலுள்ள மக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த இரு ஆண்டுகளில் திறந்த வழிகளில் கொட்டப்படும் குப்பைகளை உட்கொண்ட 37 பசு மாடுகள் மரணித்துள்ளதாகவும், பகல் இரவு எந்த நேரமும் ஆபத்தான காட்டு விலங்குகளின் நடமாட்டம் காணப்படுவதால் அச்சம் நிறைந்த வாழ்வியலை அனைவரும் அனுபவித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கொலைக்களமாக மாறிவரும் மூதூர் பிரதேச சபையின் குப்பை திடல் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளதுடன், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எப்.முபாரக்



# ‘நாடு அனுரவோடு... வீடு வீணையோடு’

முருகானந்தன் தவம்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் முழு ஆட்சி அதிகாரத்தை தாங்களே கைப்பற்றுவோம், ஆட்சி அமைப்போம் என்று சூளுரைத்த இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். மாவட்டத்தில் உள்ள முக்கிய சில சபைகளைப் பறிகொடுத்துள்ள நிலையில், தமிழினத் துரோகி என தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட ஈ.பி.டி.பி. (வீணை) டக்ளஸ் தேவானந்தாவின் காலடி சென்று மண்டியிட்டதன் மூலம் அவரின் கட்சி ஆதரவுடனேயே சில யாழ். மாநகரசபை உள்ளிட்ட சில சபைகளைக் கைப்பற்றியுள்ளது.

‘நாடு அனுரவோடு ஊர் எங்களோடு’ என்றார் தமிழரசின் தலைவர் ஒருவர். ஆனால், இன்று ‘நாடு அனுரவோடு... வீடு வீணையோடு’ என்றவாறாக வடக்கின் குறிப்பாக யாழ். மாவட்டத்தின் பல உள்ளூராட்சி சபைகளைத் தமிழரசு கைப்பற்றியுள்ளது.

தமிழ் தேசியக் கட்சிகளின் தாய் கட்சி என போற்றப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியே வடக்கின் குறிப்பாக யாழ். மாவட்டத்தின் ஆட்சியை, மேயர், பிரதி மேயர், தவிசாளர், பிரதி தவிசாளர் பதவிகளை தாங்களே கைப்பற்ற வேண்டுமென்ற அதிகார ஆசையினால் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைப் புறக்கணித்து,அவர்களின் சில நிபந்தனைகளை நிராகரித்து விட்டு பேரினவாதிகளினதும் துரோகிகளினதும் ஆதரவோடு சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றி வருகின்றது.

பேரினவாதக் கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்ரமசிங்கன் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழினத் துரோகி என இவர்களினாலேயே குற்றம் சாட்டப்பட்ட டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றே வடக்கின் சபைகளைக் கைப்பற்றி தமிழரசுக் கட்சி கட்சி மிகப்பெரும் காட்டிக்கொடுப்பையும் துரோகத் தனத்தையும் தமிழ்த் தேசியத்திற்கும் தமிழினத்திற்கும் செய்துள்ளது.

வடக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றவர்கள் ஆட்சியமைக்க நாம் ஆதரவளிப்போம். அதேவேளை, இரண்டாவது இடத்தில் நாம் இருந்தால் எமக்குப் பிரதி மேயர், அல்லது பிரதி தவிசாளர் பதவி தரவேண்டும் என்ற நிபந்தனையை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய பேரவை- தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வைத்திருந்தது. அத்துடன், ஒரு சில சபைகளில் தமக்கு பிரதி தவிசாளர் பதவி வேண்டுமென ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் (சங்கு) கோரியிருந்தது.

ஆனால், யாழ். மாநகரசபையை ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளின் எந்தவொரு ஆதரவுமின்றி, முழுமையாகக் கைப்பற்றத் தமிழரசு திட்டமிட்டது. அதனால் அவர்களை நிராகரித்து விட்டு ஈ.பி. டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவிடம் தமிழரசு சரணாகதி அடைந்தது. அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றினுடனும் இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டு ஆதரவு கோரியது.

யாழ். மாநகரசபையில் மொத்தமாக 45 ஆசனங்கள் உள்ளன. இந்நிலையில், 2025 மே 6இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, 1,0370, வாக்குகள் பெற்று 13, ஆசனங்களையும் தமிழ்த் தேசிய பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 9,124 வாக்குகள் பெற்று, 12, ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி, 7,702, வாக்குகள் பெற்று 10 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, 3,567 வாக்குகள் பெற்று 4, ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி, 3,076, வாக்குகள் பெற்று 4 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய கட்சி, 587 வாக்குகள் பெற்று 1 ஆசனத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி, 464, வாக்குகள் பெற்று 1 ஆசனத்தையும் பெற்றிருந்தன. யாழ். மாநகரசபையில் ஆட்சியமைக்கும் கட்சி 23 ஆசனங்களை பெறவேண்டும்.

தமிழரசுக் கட்சி மேயர் வேட்பாளராக நிறுத்திய மதிவதனி விவேகானந்தராஜா 19 வாக்குகளைப் பெற்று யாழ். மாநகர சபையின் மேயராக தெரிவு செய்யப்பட்டார். தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில், ஈ.பி. டி.பியின் 4 ஆசனங்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் 1 ஆசனம், ஐக்கிய தேசியக் கட்சியின் 1 ஆசனம் என்பவற்றை பெற்றே 19 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. எனினும், பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க 23 ஆசனங்கள் தேவையென்பதனால், யாழ். மாநகரசபையில் சிறுபான்மை ஆதரவுடனேயே தமிழரசு ஆட்சியமைத்துள்ளது.

அதேவேளை, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிறுத்திய மேயர் வேட்பாளர் -தமிழ் மக்கள் பேரவை-தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 12 ஆசனங்கள், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் 4 ஆசனங்களுடன் 16 ஆசனங்களைப் பெற்றிருந்த நிலையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களுடன் நடு நிலை வகித்தது. தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு மேயர் பதவியைப் பெற கஜேந்திரகுமார் விரும்பியிருந்தால் தேசிய மக்கள் சக்தியின் 10 ஆசனங்கள் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் 4 ஆசனங்களைப் பெற்று 26 ஆசனங்களுடன் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்திருக்க முடியும். ஆனால், அவர் தமிழ்த் தேசியக் கொள்கைக்காக அதனைச் செய்யவில்லை.

ஆனால், ஈ.பி.டி.பி., ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்க மறுத்திருந்தால் தமிழரசு நிச்சயம் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவைக் கோரியிருக்கும். ஏனெனில், தமிழரசுக் கட்சிக்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எதிரிகளே தவிர, பேரினவாதக் கட்சிகளோ துரோகிக் கட்சிகளோ எதிரிகள் கிடையாது. தமிழரசின் தலைமைகள் எப்போதும் பேரினவாத கட்சிகளின் தலைவர்கள், எஜமானர்களின் விசுவாசிகளாக, அடிமைகளாகவே இருந்து வந்துள்ளனர். அதன் இறுதி உதாரணமாக, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராகத் தமிழ் தேசியக் கட்சிகள் அரியநேத்திரனை நிறுத்தியபோது, அவரை தோற்கடிக்க முழு மூச்சாக இந்த தலைவர்கள் சிலர் செயற்பட்டதுடன், அவருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாதெனவும் கூறியதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவையே பகிரங்கமாகவே ஆதரித்திருந்தார்கள்.

இவ்வாறாக யாழ். மாநகரசபையை எதிரிகளோடும் துரோகிகளோடும் சேர்ந்து கைப்பற்றிய தமிழரசு இங்கு தமக்குப் போட்டியாக வேட்பாளரை நிறுத்திய தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட சாவகச்சேரி நகரசபையிலும் ஆட்சியைக் கைப்பற்ற சகுனித்தனமாக அக்கட்சியின் இரு வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து அவர்களுக்கு எதிராக இடைக்காலத்தடை உத்தரவைப் பெற்று வாக்களிப்பில் பங்கேற்க விடாது செய்து அதிகாரத்தைக் கைப்பற்றச் சதி செய்தது.

சாவகச்சேரி நகர சபையில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 6 ஆசனங்களையும் தமிழரசுக் கட்சி 6 ஆசனங்களையும் பெற்றிருந்தன. வாக்குகள் அடிப்படையில், தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2,959 வாக்குகளையும் தமிழரசுத் தரப்பு 2,594 வாக்குகளையும் பெற்றன. இதன்படியே தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னிலை வகித்தது. இச்சபையில், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (சங்கு) இரு ஆசனங்களையும் ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இந்நிலையில், தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடன் கொள்கை ரீதியில் ஒப்பந்தம் செய்து ஓரணியாகி தமது ஆசனங்களின் எண்ணிக்கையை 8 ஆக அதிகரித்தது. இதேவேளை, தமிழரசுக் கட்சி ஈ.பி.டி.பியிடம் ஆட்சியைக் கைப்பற்ற ஆதரவைக் கோரியிருந்தது. இந்நிலையில், தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வசம் 8 ஆசனங்களும் தமிழரசு, ஈ.பி.டி.பி. வசம் 7 ஆசனங்களும் இருந்தன. தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களுடன் நடு நிலை வகித்தது

தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஓர் ஆசனத்தால் முன்னிலை வகித்த நிலையில்தான் இவர்களை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றவேண்டுமென்ற அதிகார ஆசை மற்றும் பழிவாங்கும் வெறியில் அவசர அவசரமாக 11ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சபை உறுப்பினர் ஒருவருக்கு எதிராக தமிழரசுக் கட்சியினால் வழக்குப் போடப்பட்டது.

13ஆம் திகதி மாலை சபை கூடவிருந்த நிலையில், அன்று காலை அந்த உறுப்பினருக்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டது. இதனால், தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 7ஆகக் குறைந்தது.தமிழரசு - ஈ.பி.டி.பி தரப்புக்கும் ஆசனங்கள் 7ஆக இருந்தன. இதற்கிடையில் ஏற்கனவே, தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தரப்பின் மற்றொரு பெண் உறுப்பினரை சபைக்குப் போகக்கூடாது என்று தமிழரசின் எடுபிடிகள் தொலைபேசி மூலம் பலதடவைகள் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தகவல்கள் உண்டு. அவரையும் சபைக்கு வரவிடாமல் தடுத்து தமிழரசு - ஈ.பி.டி.பி. தரப்பு 7:6 என்ற ஆசனங்கள் அடிப்படையில் சபையைக் கைப்பற்றுவதே சதித் திட்டமாகவிருந்தது.

ஆனாலும், அந்த பெண் உறுப்பினர் சபைக்கு வந்து விட்டார். இந்நிலையில், தமிழ் மக்கள் பேரவை -தமிழ் தேசிய மக்கள் முன்னணி தரப்புக்கும் தமிழரசு - ஈ.பி.டி.பி. தரப்புக்குமிடையில் தவிசாளர் - உப தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நடைபெற்ற போது, இரு தரப்புகளும் தலா 7 வாக்குகளைப் பெற்று சமனிலை பெற்றன. இதனால் திருவுளச்சீட்டு (குலுக்கல் முறை) முறை மூலம் இரு பதவிகளுக்கும் தெரிவு இடம்பெற்றது. இரு தடவைகளும் தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வெற்றி கிடைத்தது. இதற்கமைய தமிழரசின் சதியை, சகுனித்தனத்தை அதிர்ஷ்டத்தின் மூலம் முறியடித்து சாவகச்சேரி நகர சபையைத் தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றியது.



# பெற்றோர்களின் பாவைகளா பிள்ளைகள்

## சமூகமயமாக்கல் நோக்கு

பரமதயாளன் மதுசன்,
நான்காம் வருடம்,
கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவன்,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு மனிதர்களின் வாழ்விலும் தவிர்க்க முடியாத அங்கம் என்ற வகையில் பெற்றோர்களுக்கு முக்கியத்துவமுண்டு. இதனாலேயே சான்றோர் 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என தெய்வத்திற்கு மேலாகப் பெற்றோரைப் போற்றி உயர்ஸ்தானம் வழங்கினர்.

பிள்ளையின் கற்றலானது தாயின் கருவறை தொடங்கி வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றது. குடும்பத்தில் பெற்றுக்கொள்ளும் சகல அம்சங்களையும் ஏதோ ஒரு வகையில் பிள்ளை சமூகத்தில் வெளிப்படுத்துகின்றது. தனையே 'சிக்மன் பிரைட்' மனிதன் குடும்பத்தில் கற்றுக் கொண்டவற்றையே சமூகத்தில் பிரதிபலிக்கின்றான்' என்றார்.

பிள்ளைகளின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பெற்றோர்களே அடிநாதம் எனலாம். கருத்துச் செறிவான தாலாட்டுப் பாடலில் துவங்கி பண்பாடு கலாசாரம், நீதி, வீரம் என அனைத்தையும் பெற்றோரிடமிருந்தே பிள்ளைகள் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறானதொரு இடைத்தொடர்புகள் அற்ற பிள்ளைகள் பின்னாளில் நெறி பிறழ்வான நடத்தைகளை வெளிப்படுத்தி நிற்பர்.

விழி இழந்தவர்களுக்கு வழிகாட்டியான லூயிஸ் ப்ரெய்லி' ப்ரெய்லி முறையை' அறிமுகம் செய்வதற்கும், நரேந்திரன் சுவாமி விவேகானந்தராக மாறியதற்கும், சிறுவயதிலே பாடசாலை கல்வியிலிருந்து விலக்கப்பட்ட தோமஸ் அல்வா எடிசன் பல்வேறு விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவர்களின் பெற்றோர்களே உறுதுணையாக இருந்தனர்.

பாடசாலை காலத்தில் எடிசனைக் கூர்ந்து கவனித்த ஆசிரியர் எடிசனின் தாயாகிய நான்சிக்கு ஒரு கடிதத்தினை எழுதி அனுப்புகின்றார். அதில் 'உங்களது மகன் மூளை வளர்ச்சி குன்றியவனாக இருக்கலாம் ஆகவே அவனைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்' இதனால் கண்ணீர் மல்கிய நான்சியிடம் எடிசன் என்னவென வினாவிய போது 'உங்கள் குழந்தை அதிக அறிவாற்றலுடன் உள்ளான் அவனுக்கு ஏற்ற பாடசாலை இதுவல்ல' என்றார் நான்சி பின் எடிசனுக்கு வீடே பாடசாலையாகவும் தாயே ஆசிரியராகவும் இருந்து எடிசன் 1000க்கு மேற்பட்ட கண்டுபிடிப்புகளை அறிவியல் உலகிற்கு அறிமுகம் செய்வதற்கு அவரது தாயே ஆதாரமாக இருந்தார்.

பிள்ளைகள் பிறக்கும் போது நல்லவர்களாகவே பிறக்கின்றனர். அவர்கள் சிறந்த பிரஜைகளாவதும் நெறி பிறழ்வானவர்களாக மாற்றமுறுவதும் பெற்றார்களிடமே உள்ளது. பெற்றார்களின் அன்பும் அரவணைப்பும் பிள்ளைகளை வளப்படுத்துவதில் முக்கிய இடம் வகிக்கின்றன. பெற்றோர்களுடன் சிறந்த இடைத்தொடர்புடைய பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்றமை ஆய்வுகளின் மூலம் அறிய முடிகின்றது.

தற்கால கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பெற்றோர்களின் நிலை தொடர்பாக ஆராயும்போது ஆரம்பக் காலங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் இருந்த இடைத்தொடர்புகள் வலுவிழந்து செல்லும் போக்கினையே காண முடிகின்றது. இதனால் நாளுக்கு நாள் தற்கொலைகளும், துஷ்பிரயோகங்களும், ஒழுக்க சீர்கேடுகளும் அதிகரித்துள்ளன. சான்றாக சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உளர் வலய அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பிமல் ரத்நாயக்க 'இலங்கையில் 17- 20 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களில் ஒரு வருடத்தில் 225 பேர் தன்னுயிரை மாய்த்துக் செய்துகொள்வதாகவும், 20 வயதிற்கு உட்பட்ட பெண் பிள்ளைகள் கர்ப்பமாகும் வீதம் அதிகரித்து வருவதாகவும்' சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இளம் வயது கர்ப்பிணிப் பெண்களின் வீதம் அதிகரித்து வருகின்றது. கடந்த 2015ஆம் ஆண்டில் 20 வயதிற்குக் குறைந்த பெண் பிள்ளைகள் 19 ஆயிரத்து 327 பேர் கர்ப்பமாகியுள்ளனர். கடந்த 2017ஆம் ஆண்டு 17 ஆயிரத்து 509 பேர் கர்ப்பமாகியுள்ளனர்.

இலங்கையின் திருமண சட்டங்களில் சாதாரண பொது சட்டம், கண்டிய சட்டம், முஸ்லிம் திருமண சட்டம் என மூன்று திருமண சட்டங்கள் கையாளப்படுகின்றது. இதில் கண்டிய மற்றும் முஸ்லிம் சட்டத்தின் மூலமாகவே அதிகளவில் சிறுவர் திருமணங்கள் , இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் ஒரு வருடத்தில் 18 வயதிற்கு குறைந்த முஸ்லிம் பெண் பிள்ளைகள் 2525 பேர் கர்ப்பமாகின்றனர் என மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றது. இலங்கையில் திருமண வயது 18 ஆக இருந்த போதும் 12 வீதமானவர்கள் 18 வயதுக்கு முன்பாக திருமணம் செய்கின்றனர். இவர்களில் இரண்டு வீதமானவர்கள் 15 வயதை எட்ட முன்பே திருமணம் செய்கின்றனர்.

தற்கால, இயந்திரமயமான உலகில் தங்களுக்கென ஓர் இடத்தினை அடைந்து கொள்ளவும் பிள்ளைகளுக்குரிய அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் அல்லும் பகலும் உழைப்பதிலும் பொருள் ஈட்டுவதிலுமே பெற்றோர்கள் அதிக அக்கறை காட்டுகின்றனர். இதனால் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படுகின்றது. பெற்றோர்கள் வீட்டிலிருக்கும் குறுகிய நேரங்களிலும் பிள்ளைகளுடன் பேசுவதும் அவர்களை அரவணைப்பதும் நடைமுறை சாத்தியமற்றதாகின்றது. இதனால் பிள்ளைகளுக்கு அன்பு, அரவணைப்பு, பாசம் முதலானவை எட்டாக்கனியாகின்றன.

பெற்றோர்களில் பெரும்பாலானோர் தொழில் நிமித்தம் வெளிநாட்டுக்கு செல்வதும் இதனால் பிள்ளைகள் சரியான பராமரிப்பின்றி துஷ்பிரயோகத்திற்கும் போதைப்பொருள் பாவனைகளுக்குள்ளாவதும் இன்றைய சூழ்நிலையில் பரவலடைந்துள்ளன. அது மட்டுமன்றி, பிள்ளைகள் சமூகத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்க நேரிடுகின்றது. இது பிள்ளைகளின் வாழ்வில் பாரிய தாக்கத்தினை உண்டாக்குகின்றது. இன்றைய நிலையில் பாடசாலை, பல்கலைக்கழகம், தனியார் கல்வி நிறுவனங்கள் என பல்வேறு இடங்களிலும் முகம் சுழிக்கும் வண்ணம் மாணவர்களைத் திசை திருப்பியுள்ள போதைப்பொருள் மாணவச் சமூகத்தினை நிலைகுலையச் செய்துள்ளது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் மாத்திரமின்றி, மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையும் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது.

பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளைப் பந்தயக் குதிரைகளைப் போன்று நடத்துகின்றனர். தங்களது சமூக அந்தஸ்திற்காகவும் சுயமரியாதைக்காகவும் பிள்ளைகளை அவர்களின் சுயவிருப்பின் படியன்றி தங்களது விருப்பினை நிறைவேற்றும் கருவியாகவே கருதுகின்றனர். பாடத் தெரிவிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் பிள்ளைகள் பெற்றோர்களின் பாவைப் பிள்ளைகளாகவே மாற்றுகின்றனர். உதாரணமாக, புலமைப்பரிசில் பரீட்சை தொடங்கி க.பொ.த சாதாரண தர, உயர் தரப் பரீட்சை வரை பெற்றோர்களால் பிள்ளைகள் இயந்திரங்களைப் போன்று வழி நடத்தப்படுகின்றனர். பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது பிள்ளைகளை தங்களது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் பாடத் தெரிவினை மேற்கொள்ள வைக்கின்றனர்.

கலையில் ஆர்வமுடைய பிள்ளைகளைக் கணிதம் படிக்கும்படி தூண்டுவதும் வர்த்தகப் பிரிவினைத் தெரிவு செய்கின்ற மாணவர்களை விஞ்ஞானப் பிரிவை கற்கும்படி கட்டளையிடுவதும் தங்களது சமூக அந்தஸ்திற்கு மாணவர்களை இரையாக்குவதற்கு சமமாகின்றது. இதனையே இன்றைய நிலையில், பெரும்பாலான பெற்றோர்கள் பின்பற்றுகின்றனர். இதனால் மாணார்களின் விருப்பின்படி அன்றி பெற்றார்களின் விருப்பின்படியே மாணவர்கள் கற்க நேரிடுகின்றது.

வறுமை, பௌதிக வசதிகளற்ற சூழல், பெற்றோர்களின் கல்வித் தகைமை, மறுமணம், பிரிவு, வெளிநாடு செல்தல் போன்றனவும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றன. வறுமையினால் கணிசமான மாணவர்கள் பாடசாலையிலிருந்து, இடை விலகுகின்றனர். மனித வளங்களும் ஏனைய வசதிகளையுமற்ற பாடசாலைகளில் கூட கல்வியைத் தொடரமுடியாத நிலையே காணப்படுகின்றது. கல்வி அறிவுடைய பெற்றார்கள் கூட பிள்ளைகளைக் கவனிக்கத் தவறுகின்ற நிலையே நிலவுகின்றது. 'வீட்டில் கல்விச்சூழல் நன்கு அமையும் போது பிள்ளையின் கல்வியில் முன்னேற்றம் உண்டு' என மாஸ்கிறெவ் (1996) குறிப்பிடுவது கற்றலில் வீட்டுச்சூழலின் முக்கியத்துவத்தினை சான்றுப்படுத்துகின்றது.

பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுக்கச் சிரமப்படும் பெற்றோர்கள் ஒருபுறமிருக்க மற்றுமொரு பக்கம் எண்ணிலடங்கா வசதிகளைச் செய்வதுடன், தமது பொறுப்பு முடிவடைந்ததாகக் கருதுகின்ற பெற்றோர்களும் இருக்கின்றனர். ஆடை, ஆபரணம் தொடக்கம் செல்லிடத் தொலைபேசி வரை அனைத்தையும் வழங்கும் பெற்றார்கள் பிள்ளைகளின் நலன் சார்ந்து அவர்களைக் கவனிக்கத் தவறுகின்றனர். இதனால் பிள்ளைகள் நெறி பிறழ்வான நடத்தைகளை வெளிப்படுத்துகின்றனர்.

ஆரம்பக் காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் உறவாடி, கதை கூறி அவர்களை வழிப்படுத்தி பாடசாலையில் வழங்கப்படுகின்ற வீட்டு வேலைகளை உரிய நேரத்திற்குப் பூர்த்தி செய்வதற்குத் துணைபுரிந்தனர். ஆனால், தற்கால நவீன உலகில் பெற்றார்கள் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளில் காட்டும் அக்கறை சற்றுத் தளர்வடைந்துள்ளது. ஏனெனில், பெற்றார்கள் தனியார் கல்விக் கூடங்களில் தமது முழுப்பொறுப்பையும் சுமர்த்தி விட்டு அத்துடன், தமது பணி முடிந்ததாகச் செயற்படும் போக்கே அதிகரித்துள்ளது. தனால் பிள்ளைகள் தவறான வழிகளில் செயற்பட எத்தனிக்கின்றனர். உதாரணமாக பிரத்தியேக வகுப்பிற்குச் செல்வதாகக் கூறி விட்டு குளம், ஏரிகளில் குறித்தல் மற்றும் காதலர்களுடன் பூங்கா, களியாட்ட நிகழ்வுகள் போன்றவற்றிற்குச் செல்லுதல் போன்வற்றைக் குறிப்பிடலாம்.

பிள்ளைகளுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதுடன் மாத்திரம் பெற்றோர்களின் தொடர்பு நின்று விடுவதில்லை பிள்ளைகளைக் கவனிப்பதும் அவர்களுடன் சிறந்த நண்பர்களைப் போன்று உரையாடி வழிப்படுத்துபவர்களாகவும் பெற்றார்கள் செயற்பட வேண்டும்.

# அழகிய தேவதையே அருகே வா...

றொசில்டா அன்டன்



"அப்பா இன்று ஓர் ஆய்விற்காக அரவிந், சுமித்துடன் வெளில போறன் வந்ததும் கதைக்கிறன்"

வினோத் அப்பாவிடம் தொலைபேசியில் வெளியூர் போவதைப்பற்றி கூறி விட்டு தொலைபேசியை அணைத்து விட்டான்.

பல்கலைக்கழகத்தில் அறிமுகமான நண்பர்களே அரவிந், சுமித்.

பல்கலைக்கழகத்தில் பாடம் சம்மந்தமாக காட்டுப்பகுதியில் இருக்கும் பறவை விலங்குகளின் வாழ்வியல் தொடர்பான ஆய்விற்காக செல்வதாக புறப்பட்டார்கள்.

அரவிந்தின் அப்பா தனக்காக பாவிக்கு ஜீப் வண்டியில் அவர்கள் மலைகள் சூழ்ந்த காட்டுப்பகுதியையே தமது ஆய்விற்காக தேர்ந்தெடுத்திருந்தார்கள். "மச்சான் வினோத் நாங்க போற மலைக் கிராமங்களில அழகான பெண்கள் இருக்கிறாங்களோ?" சுமித் மிக ஆவலாக கேட்க இரு நண்பர்களும் ஹ... ஹ... ஹ... என்றே சிரித்து விட்டனர். "இல்ல மச்சான் அங்க அழகிய தேவதைகளே இருக்குதாம் நீ பாக்கலாம்"... மீண்டும் சிரிப்பு.

மலை வளைவுகள் நெளிய நெளிய "செந்தாளம் பூவில் வந்தாடும் தென்றல் என்மீது மோதுதம்மா...அம்மம்மா... ஆனந்தம்... வினோத் ஜீப்பிலிருந்து இயற்கையை ரசித்தபடியே பாடிக்கொண்டுவர... அவர்கள் வரவேண்டிய காட்டுப் பகுதியும் வந்தது.. ஓங்கி உயர்ந்த இராட்சத மரங்கள், மலைப்பாம்புகளா என அச்சமூட்டும் கொடிகள் கத்தல்,கீச்சிடல், ஓலம் என அத்தனை மாயாஜால ஒலிகளையும் ஒன்றாக இசையமைத்தது காடு... அவர்களின் ஆராய்ச்சி வேலைகளை வெகு விரைவாக செய்து கொண்டிருந்தார்கள் மாலை ஐந்து மணிக்குள் காட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும். காட்டிலாக்கா அதிகாரிகளின் கட்டளை...

"டேய் மச்சான் வெளிக்கிடுவம் ஜீப்பும் நீரோடைக்கு கிட்ட நிப்பாட்டியிருக்கு அதையும் பரிசோதித்து எரிபொருளை நிரப்பி ஆயத்தப்படுத்த வேணும்." பேசிய வண்ணமே நீரோடைக்கருகில் வந்தவர்களுக்கு பேரதிர்ச்சி ஜீப் வண்டி தலைகீழாக கிடந்தது. யானைக் கூட்டமே அவ்விடத்தை கடந்த தடயங்கள் தெரிந்தது.

மிகப் பிரயத்தனம் செய்து ஜீப்பை நிமிர்த்தினார்கள். ஆனால் துரதிஸ்டவசமாக என்ஜின் இயங்கவே இல்லை.

"என்னடா மச்சி செய்வம்"

"இருட்டிறதுக்கிடையில பக்கத்தில ஆட்கள் இருக்கிற இடமாக போவம் நாளை வண்டிய எடுக்க ஆட்களை செட் பண்ணுவம்."

இருள இருள திக் திக நிமிடங்கள் அவர்களுக்காகவே காத்திருந்தது.

அந்த காட்டுப் பகுதியில் வெளியுலகத்துடன், தொடர்பில்லாத ஒரு கிராமம் இருந்தது.

அந்தக் கிராமத்திற்குள் நுழைபவர்கள் யாரும் உயிருடன் வெளியே வந்ததில்லை.

அந்தக் கிராமத்தைப் பற்றிய பயங்கரமான கதைகள் தலைமுறை தலைமுறையாகப் பேசப்பட்டு வந்தன.

அந்தக் கதைகளைக் கேட்டாலே இரத்தம் உறைந்து விடும். இவை அனைத்தையும் அறியாத மூன்று இளைஞர்கள் அரவிந்த், வினோத், மற்றும் சுமித்

அந்தோ பரிதாபம்!

அடர்ந்த காட்டின் நடுவே அமைந்திருந்த அந்தக் கிராமத்தை அடைந்தபோது, அங்கே ஒரு அசாதாரணமான அமைதி நிலவியது. வீடுகள் காலியாக இருந்தன. எந்த சத்தமும் இல்லை. ஒரு உயிரினத்தின் நடமாட்டம் கூட இல்லை. மெதுவாக, அவர்கள் கிராமத்திற்குள் நடந்தனர். திடீரென, அவர்களுக்குப் பின்னால் யாரோ நடப்பதைப் போன்ற ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது அங்கே யாருமில்லை.

அரவிந்த், "யாரோ இருக்கிறார்கள்! நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று கிசுகிசுத்தான்.

அவர்கள் ஒரு பழைய கோவிலைக் கண்டனர்.

அதன் கதவுகள் திறந்திருந்தன. உள்ளே இருந்து ஒரு மெல்லிய அழுகைச் சத்தம் கேட்டது.

வினோத், தைரியமாக உள்ளே எட்டிப் பார்த்தான். உள்ளே இருள் சூழ்ந்திருந்தது. திடீரென, வினோத்தின் கண்களுக்கு ஒரு உருவம் தெரிந்தது.

அது ஒரு பெண்ணின் உருவம். அவளது கண்கள் சிவந்திருந்தன. அவளது முகத்தில் பயங்கரமான கோபம் தெரிந்தது.

அவள் அவர்களைப் பார்த்து சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவர்களை உலுக்கியது. அந்த சிரிப்பிலேயே ஒரு மிரட்டல் தொனித்தது. அவள் மெதுவாகக் கையை நீட்டினாள். அவளது கையில் ஒரு கூர்மையான கத்தி இருந்தது.

சுமித் பயத்தில் அலறினான். "ஓடுங்கள்..!" என்று கத்தினான்.

மூவரும் திரும்பி ஓட ஆரம்பித்தனர். ஆனால், கிராமத்தின் வெளியே செல்லும் பாதை இருளில் மறைந்திருந்தது.

அவர்களுக்கு வழி தெரியவில்லை. அந்தப் பெண் அவர்களைத் துரத்தினாள். அவளது காலடி சத்தங்கள் அவர்களுக்கு நெருக்கமாக வந்தன.

திடீரென, அரவிந்த் ஒரு பள்ளத்தில் விழுந்தான். அவனது கால் சுளுக்கிக் கொண்டது. வினோத்தும் சுமித்தும் அவனைத் தூக்க முயன்றனர். ஆனால், அந்தப் பெண் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தாள். அவளது கத்தி மின்னியது.

வினோத், "எங்களை விட்டுவிடு! உனக்கு என்ன வேண்டும்?" என்று கத்தினான்.

அந்தப் பெண் சிரித்தாள். "நீங்கள் என் விருந்தினர்கள். இங்கே வந்தவர்கள் யாரும் திரும்பிச் சென்றதில்லை" என்றாள்.

அவள் கத்தியை ஓங்கினாள். அரவிந்த் கண்ணீர் மல்க அவளைப் பார்த்தான். அடுத்த கணம்...

அந்தப் பெண்ணின் கத்தி, அரவிந்தின் தோள்பட்டையில் ஆழமாகப் பதிந்தது. அவன் வலியால் துடித்தான். வினோத்தும், சுமித்தும் அதிர்ச்சியில் உறைந்தனர். அரவிந்தின் காயம் ஆழமாக இருந்ததால், அவனால் நகர முடியவில்லை.

"நீங்கள் இருவரும் தப்பித்துச் செல்லுங்கள்! என்னால் வர முடியாது" என்று அரவிந்த் முனங்கினான்.

சுமித், "இல்லை, உன்னை விட்டு நாங்கள் போக மாட்டோம்" என்று கத்தினான்.

ஆனால், அந்தப் பெண் மீண்டும் சிரிக்க ஆரம்பித்தாள். அவளது சிரிப்பு காற்றில் கலந்த ஒரு பயங்கரமான ஓலமாக மாறியது.

சுமித் நிலைகுலைந்து போனான். வினோத், அரவிந்தைப் பற்றி இழுக்க முயன்றான். ஆனால் அந்தப் பெண் அவர்களை விடவில்லை.

"இங்கேயே இருங்கள்! நான் உங்களுக்கு ஒரு விருந்து வைத்திருக்கிறேன்," என்று சொல்லிவிட்டு, அவள் ஒரு மர்மமான மொழியில் ஏதோ முணுமுணுத்தாள். அடுத்த கணமே, கிராமத்தைச் சுற்றிலும் இருந்த வீடுகளின் ஜன்னல்களில் இருந்து மஞ்சள் நிற கண்கள் சுடர ஆரம்பித்தன. அது ஏதோ ஒரு மிருகத்தின் கண்கள் போல் தோன்றவில்லை. அவை மனிதர்களின் கண்கள் போல் இருந்தன, ஆனால், அவை வெறுமையாகவும், உணர்வற்றதாகவும் இருந்தன.

திடீரென, அந்த வீடுகளில் இருந்து நிழல் உருவங்கள் வெளியே வர ஆரம்பித்தன. அவை மெதுவாக அவர்களை நோக்கி நகர்ந்தன. அந்தக் கிராமத்தில் காலியாக இருந்த வீடுகளில், உயிரற்ற உடல்கள் ஏதோ ஒரு சக்தியால் வழிநடத்தப்பட்டு, அவர்களை நோக்கி வந்தன. அவற்றின் தோற்றம் மனிதனைப் போல இருந்தாலும், அவை வெறும் எலும்புக் கூடுகளால் ஆனவை போலத் தோன்றின. அவற்றின் கண்களில் எந்த உணர்வும் இல்லை.

வினோத் இதைப் பார்த்ததும் முழுவதுமாக பயத்தில் உறைந்தான். "இவை... இவை பிணங்கள்! இந்தக் கிராமம் ஒரு பிணங்களின் நகரம்!" என்று கத்தினான்.

அந்தப் பெண் சிரித்துக் கொண்டே, "ஆம்... இது என் ராஜ்ஜியம்! இங்கே வந்த அனைவரும் என் விருந்தினர்கள். நீங்களும் என் ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக மாறப் போகிறீர்கள்" என்றாள்.

அரவிந்த் தனது கடைசி முயற்சியாக, தனது கையை நீட்டி வினோத்திடம், "ஓடிப் போ..! எங்களை மறந்துவிட்டு ஓடிப் போ..!" என்று கத்தினான்.

வினோத்தும் சுமித்தும் பயத்தில் உறைந்து நின்றபோது, அந்தப் பெண் தனது கத்தியை மீண்டும் ஓங்கினாள். இந்த முறை அவள் சுமித்தை நோக்கி குறி வைத்தாள். சுமித் கண்களை மூடிக்கொண்டான். அவனது இதயம் வேகமாகத் துடித்தது.

அந்தப் பெண் கத்தியை ஓங்கிய அடுத்த கணம், ஒரு வெண்கல மணி ஓசை பலமாக ஒலித்தது. அந்தச் சத்தம் காற்றில் பரவியதும், நிழல் உருவங்கள் அனைத்தும் ஒரு கணம் மறைந்து போயின. கிராமத்தின் மறுபக்கத்தில் இருந்து ஒரு வயதான சாமியார் கையில் ஒரு தடியுடன் ஓடி வந்தார். அவரது கையில், ஒரு சிலுவையும், புனித நீர் நிறைந்த ஒரு பாத்திரமும் இருந்தன. அவர் அந்தப் பெண்ணைப் பார்த்து ஏதோ ஒரு மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

அந்தப் பெண்ணின் முகம் கோபத்தால் மேலும் சிவந்தது. அவளது உடல் நடுங்க ஆரம்பித்தது. "இல்லை..! என் சக்தியை அழிக்க முடியாது..!" என்று கர்ஜித்தாள். ஆனால் அவளது குரல் பலவீனமாக ஒலித்தது. சாமியார் மந்திரத்தை வேகமாக உச்சரிக்க, அந்தப் பெண்ணின் உடலில் இருந்து கருப்பு நிறப் புகை வெளிவர ஆரம்பித்தது. அவளது உருவம் மெதுவாக மறையத் தொடங்கியது.

சாமியார் வினோத் மற்றும் சுமித்திடம், "சீக்கிரம்..!

இந்தப் பெண் இந்த கிராமத்தின் சாபமாக மாறிவிட்டாள்! இவள் ஒரு நூற்றாண்டுகளுக்கு முன் தன் காதலால் ஏமாற்றப்பட்டு, ஆவியாக மாறிவிட்டாள். இவளது ஆத்மா இங்கே மாட்டிக்கொண்டு, கிராமத்திற்குள் வரும் அனைவரையும் தனக்கு அடிமையாக்கிக் கொள்கிறது..! விடியும் முன் நாம் வெளியேற வேண்டும்..!" என்று அவசரப்படுத்தினார்.

சாமியார் புனித நீரை நிழல் உருவங்கள் மீது தெளித்தார். அவை தொட்டவுடன் புகையாக மாறி மறைந்தன. வினோத் சுமித்திடம், "அரவிந்த்தைப் பார்த்தியா?" என்று கேட்டான்.

அரவிந்த் கிடந்த இடத்தைப் பார்த்தபோது, அங்கே ஒரு மண்ணால் செய்யப்பட்ட பொம்மை உடைந்து கிடந்தது. அவன் காயமடைந்ததாக நினைத்தது வெறும் மாயை என்று புரிந்தது. அந்தப் பெண்ணின் சக்தியால் உருவான மாயப் பிம்பம் அது.

சாமியார் அவர்களைப் பார்த்து, "விரைவாக வாருங்கள்..! சூரியன் உதித்தால் இவளது சக்தி பலவீனமாகிவிடும்..! நாம் இப்போது தப்ப வேண்டும்..!" என்று கூறினார்.

அவர்கள் மூவரும் சாமியாருடன் சேர்ந்து, கிராமத்தின் பின்வாசல் வழியாக வெளியேறினர்.

மெதுவாக விடிய ஆரம்பித்தது. சூரியனின் முதல் கதிர்கள் கிராமத்தின் மீது விழுந்ததும், மீதமிருந்த நிழல் உருவங்களும், அந்தப் பெண்ணின் கடைசி தடயங்களும் காற்றில் கரைந்து போயின. கிராமம் மீண்டும் ஒரு வெறுமையான இடமாக மாறியது.

அவர்கள் காட்டு வழியாக ஓடிக்கொண்டே இருந்தனர். கிராமத்திற்கு வெளியே வந்ததும், மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அவர்களின் முகத்தில் பயமும், நிம்மதியும் ஒருங்கே தெரிந்தது. அவர்கள் ஒரு பயங்கரமான அனுபவத்திலிருந்து தப்பியிருந்தனர். ஆனால், அந்தக் கிராமத்தின் திகிலூட்டும் நினைவுகள் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன.

அவர்கள் ஒருபோதும் அந்தக் கிராமத்திற்குத் திரும்பப் போவதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டனர். அந்த கிராமம் ஒரு சாபக்கேடான இடம் என்பதை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பாடமாக கற்றுக்கொண்டனர்.

# தென்னகோன் அளித்த சுவாரஸ்யமான பதில்கள்

நீதிமன்றம் தன்னை கைது செய்ய பிடியாணை பிறப்பித்த பிறகும் தான் தலைமறைவாக இருக்கவில்லை என்று கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவின் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (24) சாட்சியமளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தேவையான இடங்களைச் சரிபார்ப்பதற்குப் பதிலாகத் தேவையற்ற இடங்களைத் தேடியதால் தன்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அவர் கூறினார்.



**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
W15 ஹோட்டலுக்கு முன்னால் நடந்த சம்பவத்தில் இறந்த உபுல் என்ற அதிகாரிக்கு இழப்பீடு வழங்க அவர் என்ன வீரச் செயலைச் செய்தார்?

ஐயா, வீரச் செயலைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர் தனது கடமையைச் செய்யச் செல்லும்போது இறந்தார். ஒரு உயர் அதிகாரியை நம்பி அவர் நல்லெண்ணத்துடன் செயல்பட்டார். எனவே, அவருக்கு வெகுமதி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
கொழும்பு குற்றப் பிரிவின் செயல் இயக்குநர் நெவில் டி சில்வா குற்றம் நடந்த இடத்திற்குச் சென்றாரா?

**தேசபந்து தென்னகோன்:**
"இல்லை ஐயா. வெலிகம பொலிஸார் சம்பவம் குறித்து விசாரித்து வருவதாலும், அவரது பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு சம்பவத்தில் ஈடுபட்டிருப்பதாலும், சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றால் ஏதாவது பிரச்சனை ஏற்படும் என்று அவர் நினைத்தார். எனவே, சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்வதற்குப் பதிலாக, வெலிகம பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் விசாரிக்கச் சென்றிருந்தார்"

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"குற்றம் நடந்த இடத்தைப் பார்ப்பது நல்லது இல்லையா?"

**தேசபந்து தென்னகோன்:**
"அப்படிப் பார்க்க வேண்டிய அவசியமில்லை"

திலீப பீரிஸ் தேசபந்து தென்னகோனிடம் நீண்ட நேரம் விசாரித்துக் கொண்டிருந்தபோது, தேசபந்து தென்னகோனும் கேள்விகளைக் கேட்டார்.

**குழுவின் நீதிபதி:**
"சாட்சி, நீங்கள் தொடர்ந்து கேள்விகள் கேட்டு வருகிறீர்கள். நீங்கள் குறுக்கு விசாரணை செய்ய முடியாது. நீதிமன்றத்தில் இருப்பது போல இருந்தால், நீங்கள் அதிகம் பேச முடியாது. ஆனால், உங்கள் வழக்கைக் கூற உங்களுக்கு ஒரு வாய்ப்பு தேவை என்பதால் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, குறுக்கு விசாரணை செய்ய உங்களுக்கு உரிமை இல்லை."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
நீதிபதி நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட பிறகு நீங்கள் ஒளிந்து கொண்டிருந்தீர்களா?

**தேசபந்து தென்னகோன்:**
"ஐயா, நான் ஒளிந்து கொள்ளவில்லை, என் கிரிஉல்ல வீட்டில் இருந்தேன். வழக்கம் போல, அந்த வீட்டில் இருந்தேன். நான் தூங்கிய அதே அறையில் தூங்கினேன். நான் சாப்பாட்டு அறைக்குச் சென்று சாப்பிட்டேன். நான் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்ந்தேன்."

**தலைமை நீதிபதி பிரிதிபத்மன் சூரசேன:**
அந்த வீட்டில் வேறு யாராவது இருந்தார்களா?

**தேசபந்து தென்னகோன்:**
"ஐயா, என் அம்மா எப்போதாவது அங்கு வருவார். அவர் வயதானவர். சில நேரங்களில் அவள் என் சகோதரர்களின் வீடுகளிலும் இருப்பாள்."

**தலைமை நீதிபதி:**
தொடர்புடைய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு வீட்டில் யார் இருந்தார்கள்

**தேசபந்து தென்னகோன்:**
"ஐயா, நான் தனியாக இருந்தேன்."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"விளக்குகளை அணைக்காமல் வீட்டிலேயே இருப்பது உங்கள் வழக்கமான முறையா?"

**தேசபந்து தென்னகோன்:**
"ஐயா, அந்த வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது, அதனால் நான் ஒரு மெழுகுவர்த்தியின் உதவியுடன் அன்றைய நாளைக் கழித்தேன்."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"தனியாக வாழ்வது உங்கள் சாதாரண வாழ்க்கையா?"

**தேசபந்து தென்னகோன்:**
"தனியாக வாழ்வது எனது சாதாரண வாழ்க்கை என்பது உங்களுக்குத் தெரியாது."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"அது... நான் தெரிந்து கொள்ளக் கேட்கிறேன். நீங்கள் மிகவும் சுறுசுறுப்பான நபர்."

**நீதிபதிகள்:**
ஹோரகந்தராவில் உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுடன் இருந்திருக்கக்கூடிய போது, நீங்கள் ஏன் கிரியுல்லாவுக்குச் சென்றீர்கள்?

**தேசபந்து தென்னகோன்:**
"ஐயா, வழக்கறிஞர்களின் ஆலோசனையின் பேரிலும், நீதிமன்ற விவகாரங்கள் காரணமாகவும், அங்கேயே தங்குவது அவசியம் என்று நினைத்தேன். ஆனால் ஐயா, தேவைப்படும்போது நானும் கொழும்புக்கு வந்தேன்."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"நீங்கள் நீதிமன்றத்தைத் தவிர்க்கவில்லை என்பது உங்கள் நிலைப்பாடா?"

**தேசபந்து தென்னக்கோன்:**
"ஆம் ஐயா, குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தேவையில்லாத இடங்களில் என்னைச் சோதனையிட்டனர். அவர்கள் கதிர்காமத்தில் உள்ள பஸ்நாயக்க நிலமேவின் வீட்டிற்குச் சென்று சோதனையிட்டனர். எனக்கு அவரைத் தெரியும், ஆனால், அவரது வீடு எங்கே என்று கூட எனக்குத் தெரியவில்லை. அவர்கள் தொடர்பில்லாத இடங்களைத் தேடினர். அவர்கள் ஏராளமான வன முகாம்களையும் தேடினர். "நான் அங்கு சென்று ஒரு துறவியாக தங்கினேன் ஐயா."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
நீங்கள் தலைமறைவாக இருப்பதாகவும், உங்களைக் கண்டுபிடிப்பதற்கு அவர் பொதுமக்களின் உதவியை நாடுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க கூறியது உங்களுக்குத் தெரியாதா?"

**தேசபந்து தென்னகோன்:**
"ஐயா, பின்னர்தான் எனக்கு விடயம் தெரிந்தது. நான் சென்று யூடியூப் மூலம் அதைப் பற்றி அறிந்து கொண்டேன்."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"இதைக் கேட்டு கோபப்பட வேண்டாம். நீங்கள் கிரிஉல்லவிலிருந்து கொழும்புக்கு வரும்போது, முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு அதிக பணம் கொடுத்து, உங்கள் வழக்கறிஞர்களை அவர்களின் மொபைல் போன்களில் WHATSAPP மூலம் தொடர்பு கொண்டீர்கள். பொதுவாக, அது நடக்காது, இல்லையா, தேசபந்து?"

**தேசபந்து தென்னகோன்:**
"அது ஒரு சாதாரண விடயம். ஏனென்றால், இப்போதெல்லாம், அனைவரும் WHATSAPP ஐப் பயன்படுத்துகிறார்கள். முச்சக்கர வண்டி ஷ ஓட்டுநர்கள் மட்டுமல்ல, சந்தையில் பொருட்களை விற்பனை செய்பவர்களும் WHATSAPP ஐப் பயன்படுத்துகிறார்கள். நான் அழைக்க விரும்பியவர்களின் எண்களை ஒரு காகிதத்தில் எழுதி வைத்திருந்தேன். நான் அவர்களை அதில் இருந்து காப்பாற்றினேன்."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"இது மிகவும் சோர்வான பயணம், இல்லையா?"


**தேசபந்து தென்னகோன்:**
"நிச்சயமாக. இது ஒரு வசதியான பயணம் அல்ல."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
"விசாரணை நடத்த ஒரு குழுவை நியமித்து, தேசபந்து நீதிமன்றத்திற்குச் சென்றதற்கு அரசியல் பழிவாங்கல் இருந்ததா என்று உங்கள் கருத்து என்ன?"

**தேசபந்து தென்னகோன்:**
"ஆம்! அப்படி ஒரு கருத்து உள்ளது."

**மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்:**
நீங்கள் ஐஜிபியாகச் செயல்பட்டபோது, சிசிடி அதிகாரிகள் உங்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள் என்பதை நீங்கள் உணரவில்லையா?"

**தேசபந்து தென்னகோன்:**
"என் ஆண்டவரே, அவர்கள் இப்போது சொல்வதை இன்னும் சிறிது நேரத்தில் மாற்றிவிடுவார்கள் என்று நான் இன்னும் கருதுகிறேன்."










## 'அணையா விளக்கு' போராட்டத்தின் இறுதி நாள்...

செம்மணி படுகொலைக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு வந்த 'அணையா விளக்கு' போராட்டத்தின் இறுதி நாளான புதன்கிழமை (25) அன்று பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன் உணர்வெழுச்சியாக நடைபெற்றது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் 'அணையா விளக்கு' போராட்டம் எனும் தொனிப் பொருளில் சர்வதேச நீதி கோரி திங்கட்கிழமை (23) அன்று ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டம் இரவு பகலாக நடைபெற்று மூன்றாவது நாளான புதன்கிழமை (25) மிகவும் எழுச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய புதன்கிழமை காலையில் அக வணக்கம் செலுத்தி மலரஞ்சலி செலுத்தப்பட்டுத் தொடர்ந்தும் அணையா விளக்குப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

- நிதர்ஷன் வினோத்














காசா

உதவிப் பொருட்களை பெறவந்தவர்கள் மீது துப்பாக்கி சூடு:

# 25 பேர் பலி

காசாவில் உதவிப் பொருட்களை பெற உதவி மையத்தில் திரண்ட மக்கள் கூட்டத்தின் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

காசாவில் வாடி பகுதியில், செவ்வாய்க்கிழமை (24) காலை, சலா அல்-தின் சாலையில் உதவிப்பொருட்களுடன் வரும் லொறிகளுக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில், 25 பேர் கொல்லப்பட்டதுடன், 146 பேர் படுகாயமடைந்தனர்.

லொறிகளை நெருங்க மக்கள் ஓடியபோது இஸ்ரேலியப் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த 146 பேரில் 62 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில், சிகிச்சை பெற்று வருவதாக அவர்களுக்கு சிகிச்சை அளித்து வரும், நுஷ்ரைத் அகதி முகாமில் உள்ள அவ்தா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தினர், டிரோன்கள், மற்றும் பீரங்கிகள் இணைந்து கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக நேரில் பார்த்தவர்கள் விவரிக்கின்றனர்.



முதலாவது டெஸ்டில்

# இந்தியாவை வென்ற இங்கிலாந்து

இந்தியாவுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், லீட்ஸில் வெள்ளிக்கிழமை(20) அன்று ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை(24) அன்று முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டை இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 471/10 (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 147, றிஷப் பண்ட் 134, யஷஸ்வி ஜைஸ்வால் 101, லோகேஷ் ராகுல் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 4/66, ஜொஷ் டொங்க் 4/86, பிறைடன் கார்ஸ் 1/96, ஷொய்ப் பஷிர் 1/100)

இங்கிலாந்து: 465/10 (துடுப்பாட்டம்: ஒலி போப் 106, ஹரி ப்றூக் 99, பென் டக்கெட் 62, ஜேமி ஸ்மித் 40, கிறிஸ் வோக்ஸ் 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 5/83, பிரசீத் கிருஷ்ணா 3/128, மொஹமட் சிராஜ் 2/122)

இந்தியா: 364/10 (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 137, றிஷப் பண்ட் 118, சாய் சுதர்ஷன் 30, இரவீந்திர ஜடேஜா ஆ.இ 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் டொங்க் 3/72, பிறைடன் கார்ஸ் 3/80, ஷொய்ப் பஷிர் 2/90, கிறிஸ் வோக்ஸ் 1/45, பென் ஸ்டோக்ஸ் 1/47)

இங்கிலாந்து: 373/5 (துடுப்பாட்டம்: பென் டக்கெட் 149, ஸக் குறோலி 65, ஜோ றூட் ஆ.இ 53, ஜேமி ஸ்மித் ஆ.இ 44, பென் ஸ்டோக்ஸ் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 2/51, பிரசீத் கிருஷ்ணா 2/92, இரவீந்திர ஜடேஜா 1/104)

போட்டியின் நாயகன்: பென் டக்கெட்.



தாய்லாந்து

## கம்போடியா எல்லையை மூடிய தாய்லாந்து

கம்போடியா உடனான எல்லையைத் தாய்லாந்து மூடியுள்ளது.

தாய்லாந்து-கம்போடியா இடையே நீண்ட காலமாக எல்லை பிரச்சினை நிலவி வருகிறது.

இதற்கிடையே கடந்த மாதம் எல்லைப் பகுதியில் இரு நாட்டு இராணுவ வீரர்களிடையே மோதல் வெடித்தது. இதில் ஒரு கம்போடிய வீரர் கொல்லப்பட்டார். இதனால் இரு நாடுகளின் உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து, தாய்லாந்தில் இருந்து காய்கறி மற்றும் பழங்கள் இறக்குமதி செய்ய கம்போடியா தடை விதித்தது. அதேபோல், தாய்லாந்து திரைப்படங்கள் மற்றும் நாடகங்களை ஒளிபரப்பவும் கம்போடியாவில் தடை விதிக்கப்பட்டது.

இதற்கு பதிலடியாக கம்போடியா உடனான எல்லையைத் தாய்லாந்து மூடியுள்ளது. இதில் மாணவர்கள் மற்றும் மருத்துவச் சிகிச்சை பெறுபவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக, தாய்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியா

மத்திய கிழக்கு நாடுகளுக்கான

## விமான சேவை மீண்டும் ஆரம்பம்




மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏர் இந்தியா நிறுவனம் மீண்டும் விமானச் சேவையைத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல், ஈரான் இடையே கடந்த சில நாட்களாக மோதல் நிலவி வந்தது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

இந்த மோதல் காரணமாக மத்திய கிழக்கில் பல்வேறு நாடுகளும் தங்கள் வான் பரப்பை மூடின. அதேவேளை, பாதுகாப்பு காரணங்களுக்காக இந்தியா விமான நிறுவனங்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தை இரத்து செய்தன.

இந்நிலையில், இஸ்ரேல், ஈரான் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பதற்றம் சற்று தணிந்துள்ளது. இதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளுக்கு எயார் இந்தியா நிறுவனம் மீண்டும் விமானச் சேவையைத் தொடங்கியுள்ளது.


அமெரிக்கா

ஈரானில்

## ‘ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை’

“ஈரானில் ஆட்சி மாற்றத்தை விரும்பவில்லை. அது தேவையற்ற குழப்பத்தை உருவாக்கும்” என்று, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “ஈரானில் ஆட்சி மாற்றத்தை நான் விரும்பவில்லை. அனைத்தும் முடிந்த வரை விரைவாக அமைதியாவதை நான் பார்க்க விரும்புகிறேன். ஆட்சி மாற்றம் என்பது குழப்பத்தை ஏற்படுத்தும். மேலும், இவ்வளவு குழப்பங்களை நாங்கள் பார்க்க விரும்பவில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.





ஈட்டி, தட்டெறிதலில்

## மாகாணத்துக்குத் தெரிவான கண்டக்குழு மு.ம.மாணவிகள்

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்று வரும் வலய மட்ட மெய்வல்லுநர் விளையாட்டு போட்டிகளில் கண்டக்குழி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவிகள் இருவர் ஈட்டி எறிதல் மற்றும் தட்டெறிதலில் வெற்றிபெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.பி.எம்.ஜெசீன் தெரிவித்தார்.

தரம் 11இல் கல்வி பயிலும் ஆர்.ரீஹா 18 வயதின் கீழ் ஈட்டி எறிதல் மற்றும் தட்டெறிதல் போட்டியிலும், தரம் 12இல் கல்வி பயிலும் எம்.எப். நப்ரினா 20 வயதின் கீழ் ஈட்டி எறிதலிலும் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை பயிற்றுவித்த விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களான எஸ்.ஐ.எம்.அம்ஜத், எம்.அஹ்சப் ஆகிய இருவருக்கும் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் ஊர் நலன் விரும்பிகள் சார்பாக தமது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதாக ஜெசீன் மேலும் குறிப்பிட்டார்.

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## அறிமுகத்தை மேற்கொண்ட சொனால் டினுஷ




பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் தனது சர்வதேச அறிமுகத்தை பந்துவீச்சு சகலதுறைவீரரான சொனால் டினுஷ மேற்கொண்டார்.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் புதன்கிழமை (25) ஆரம்பித்த இப்போட்டியில், கடந்த போட்டியுடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற அஞ்சலோ மத்தியூஸை டினுஷ பிரதியிட்டிருந்தார்.

பங்களாதேஷில் கடந்த போட்டியில் விளையாடிய ஹஸன் மஹ்மூட்டை எபொடொட் ஹொஸைன் பிரதியிட்டதுடன், ஜாகிர் அலியை மெஹிடி ஹஸன் மிராஸ் பிரதியிட்டிருந்தார்.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த நிலையில், மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 90 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றிருந்தது. களத்தில் முஷ்பிக்கூர் ரஹீம் 7 ஓட்டங்களுடனும், லிட்டன் தாஸ் 8 ஓட்டங்களுடனும் காணப்பட்டிருந்தனர். முன்னதாக ஷட்மன் இஸ்லாம் 46, மொமினுல் ஹக் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் அசித பெர்ணாண்டோ, அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா, விஷ்வ பெர்ணாண்டோ, தரிந்து ரத்னாயக்க ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தனர்.

## சன்டோஸுடனான ஒப்பந்தத்தை நீடித்த நெய்மர்

பிரேஸிலியக் கால்பந்தாட்டக் கழகமான சன்டோஸுடன் 2025ஆம் ஆண்டு முடிவு வரையில் ஒப்பந்த நீடிப்பொன்றை நெய்மர் நீடித்துள்ளதாக அக்கழகம் செவ்வாய்க்கிழமை(24) அறிவித்துள்ளது.

மேற்குறித்த ஒப்பந்தமானது 33 வயதான நெய்மரின் ஒப்பந்தத்தை 2026 உலகக் கிண்ணத் தொடர் வரையில் நீடிப்பதற்கான தெரிவொன்றையும் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.




2025ஆம் ஆண்டு ஜனவரியில் சன்டோஸில் நெய்மர் இணைந்த நிலையில், முன்னைய அவரின் ஒப்பந்தமானது ஜூன் 30ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது.

பிஹார்

பிஹாரில்

## வாக்களிக்கும் முறையில் மாற்றம்

இந்தியாவில், முதல் முறையாக மின்னணு முறையில் அலைபேசி மூலம் வாக்களிக்கும் முறையை பிஹார் மாநில தேர்தல் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது.

இந்த முன்முயற்சி அந்த மாநிலத்தில் வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் அறிமுகமாகிறது.

மின்னணு முறையில் அலைபேசி மூலம் வாக்காளர்கள் வாக்களிக்கும் செயல்முறை




மொத்தம் இரண்டு ஆண்ட்ராய்டு அலைபேசி செயலிகள் மூலம் செயற்படுத்தப்படும். இதற்காக C-DAC மையம் ‘e-Voting SECBHR’ என்ற செயலியை வடிவமைத்துள்ளது. பிஹார் மாநில தேர்தல் ஆணைக்குழு தரப்பிலும் ஒரு செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் பத்தாயிரம் வாக்காளர்கள் மின்னணு முறையில் அலைபேசியை பயன்படுத்தி வாக்களிக்கப் பதிவு செய்துள்ளனர். இந்த முறையின் கீழ் சுமார் ஐம்பதாயிரம் வாக்காளர்கள் வரையில் வாக்குச்சாவடிக்கு செல்லாமல் அலைபேசி மூலம் வாக்களிக்க முடியும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 26, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.